# பல்கலைக்கழக தெரிவு முறையை எதிர்த்து நாளை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி!

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 10 இதழ் 134
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24 — 06 — 1992

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) 1990ம் ஆண்டு விசேட பரீட்சையில், பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதில் அரசாங்கம் காட்டும் பாரபட்சத்தை ஆட்சேபித்து, ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நாளை வியா

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவரின் இடங்கள் தெற்கே இடம்மாறலாம்

(யாழ்ப்பாணம்)
1990-ம் ஆண்டு க. பொ. த. உயர்தர விசேட பரீட்சையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யும் நடைமுறையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு யூலை மாதம் 19-ம் திகதி கடைசி நாளாகும். இந்த வழக்கைக்

[4-ம் பக்கம் பார்க்க]

## அன்னையர் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)
தெற்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகளை கண்டித்து நேற்று கொழும்பு மாநகரில் பெரும் ஆர்ப்பாட்ட பேரணியை 'அன்னையர்' முன்

(4ம் பக்கம் பார்க்க)

# யாழ். குடா நாட்டில் மீண்டும் விமானத் தாக்குதல் ஆரம்பம்

### சாவகச்சேரி, சுன்னாகம், வெற்றிலைக்கேணியில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாவில்சுன்னாகம், சாவகச்சேரி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளில் நேற்றுசிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்தஇருகுண்டுவீச்சு விமானங்கள் மூர்க்கத்தனமான குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.

வலிவடக்குப் பகுதியை பல தடவை வட்டமிட்ட இரு குண்டுவீச்சு விமானங்கள் நேற்று மாலை 5-30 மணியளவில் சுன்னாகம் கந்தரோடை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

[4ம் பக்கம் பார்க்க]

## வடமராட்சி பகுதியில் விமானங்கள் நோட்டம்

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி வடக்குப் பகுதியை நேற்று இரு தடவை இரு குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டு நோட்டமிட்டன.
நண்பகல் 12 மணியளவி

[4-ம். பக்கம் பார்க்க]

## வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு திட்டம்

(யாழ்ப்பாணம்)
வட தமிழீழத்தில் சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, சிறிலங்காவின் படைத்துறைத் தலைமை திட்டமிட்டுள்ளதாக 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இப்பாரிய இராணுவத் திட்டத்திற்குப் பின்னால், தமிழ் இனத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய பல அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன. இத் திட்டத்தின் பிரதான அரசியல் நோக்கம், தமிழரின் தேசிய பலத்தைச் சிதைத்து விடுவதுதான்.

தமிழீழத்திற்குக் குறுக்காக

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை ஒப்படைக்க இலங்கை முன்வராது

(கொழும்பு)
ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள புலிகளின் தலைவர் திரு.பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க இலங்கை முன்வராது என அரசியல் வட்

[4-ம் பக்கம் பார்க்க]

# 61 நாளில் 281 படையினர்பலி 158 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
ஏப்ரல் 15-ம் திகதி முதல் ஜூன் 15-ம் திகதிவரை இடம்பெற்ற தாக்குதல்களில் 281 சிங்களப் படையினர் பலியானார்கள். 146 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 158 புலிகள் வீரச்சாவு எய்தினர்.

மேற்குறிப்பிட்ட 61 நாட்களிலும் தமிழீழத்தின் பல்வேறு முனைகளிலும் சிங்கா

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய மீட்புபடையின் பலம் அதிகரிப்பு

(சென்னை)
தமிழகத்தில் 'தமிழ்தேசிய மீட்பு படை' அமைப்பின் பலம் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படையினர் தமது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியாவில் விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்டதை எதிர்த்து இவ்வமைப்பினர் பெரும் போராட்டங்களை நடாத்த ஏற்பாடு செய்துவருகின்றனர்.

இந்த அமைப்பிற்கு தமிழகத்திலுள்ள இளைஞர்கள் தமது ஆதரவினை அளித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

# சென்னை விமான நிலையத்தில் நேற்று வெடிகுண்டுப்புரளி!

(சென்னை)
சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து புதுடில்லிக்கு நேற்றுக்காலை 6 மணிக்கு புறப்படவிருந்த இந்தியன் ஏயர் லைன்சுக்கு சொந்தமான விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற அனாமதேய தொலைபேசி தகவலையடுத்து விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

[4ம் பக்கம் பார்க்க]

# யுத்த நிறுத்தம் ஏற்படுத்தி அரசியல் தீர்வுகாணவேண்டும்

(கொழும்பு)
தற்போதைய நிலையில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் அரசியல் தீர்வு ஒன்றுக்கு முயற்சிப்பதே பொருத்தமானதாயிருக்கும் என கொழும்பிலுள்ள சர்வதேச சட்ட வல்லுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அரசியல் தீர்வொன்று உருவாகுவது மிகக் கடினமாகவே இருக்கும்.

தற்போதுள்ள நம்பிக்கையற்ற சூழ்நிலையில் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் புலிகளுடன் பேசுவது என்பது நிச்சயமற்ற ஒன்றுதான். கம்போடியா, மத்திய கிழக்கு பிரச்னை போல் ஒரு சர்வதேச மத்தியஸ்தத்தால்தான் இதற்கான அடிப்படையைக் காணலாம் என்றார். (சி)

## வேலைநிறுத்தத்தில் குதிக்க பொலிஸார் முஸ்தீபு?

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் குதிக்க பொலிஸார் தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசேட அலவன்ஸ்(பட்டா) தொடர்ந்தும் வழங்கப்படாமல்போனால் இவ்வேலைநிறுத்தம் விரைவில் நடைபெறு மனவும் தெரிய வருகிறது.

இதேவேளை பொலிஸாரில் நம்பிக்கையில்லாது வானொலி ரூபவாஹினி நிலையங்களிலிருந்து அவர்கள் வாபஸ்பெறப்பட்டமை பொலிஸார் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (சி)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எல்லா வகுப்புகளுக்கும் ஏற்ற இலகு தமிழ் இலக்கண வினா-விடை ரூபா 12-50 ''தமிழ்த் தென்றல்'' யாதுமூரானின் கவிதைகள் ரூபா 20-03 பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும். (சி- 6438)

இறைவன் திருநாமம்—நாமத்தின் மகிமையை விளக்கும் மற்றுமொரு புத்தகம். வெளியீடு ஞானயாகம், திவ்வியஜீவன சங்க மண்டபம், நல்லூர். கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம், நடுவுத் துருத்தி, அறிவாலயம், வாலாம்பிகா. [சி-6451]

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரிச் சந்தைக்கு அருகாமையில் நன்னீர்க் கிணறு, குடியிருப்பு வசதிகளுடன் 5 பரப்புக்காணியும், சிவன் கோவில் வீதியில் 3 1/4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, ஸ்ரேசன் றோட். சாவகக்சேரி. [சி-6449]

## புத்தகங்கள் மலிவு விற்பனை

இலக்கியம், சிறுவர் கதைகள், அரசியல், நாவல்கள், சிறு கதைகள், கவிதைகள், பொது விடயங்கள் போன்ற தரமான சீன ஆங்கில வெளியீடுகள் 50% கழிவில் விற்பனையாகின்றது நூலகங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். விபரங்களுக்கு: வசந்தம் புத்தகநிலையம், 405, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (சி 6439)

## ''சுவையகம்''

கலப்பற்ற நெய்மூலம் தயாரித்த லட்டு, மைசூர்பாகு போன்ற சுவைமிகு சிற்றுண்டிகளைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். ''சுவையகம்'', பிரதான வீதி, (யூனியன் பெற்றோல் நிலைய அருகாமை] சாவகச்சேரி. (ஏ-2219]

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை, கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி6436)

## தவறிவிட்டது

தெல்லிப்பளை மாவைகலட்டியைச் சேர்ந்த சி. நகுலேந்திரன் என்பவரின் 59122341V இலக்கம்கொண்ட தேசியஅடையாள அட்டையும் சீமெந்து தொழிற்சாலை அடையாள அட்டையும் ஊரெழுச் சந்தியில் நேற்று முன்தினம் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் யாழ். வைத்தியசாலை காது, தொண்டை, மூக்கு கிளினிக்கில் ஒப்படைக்கவும். (சி-6446)

## விண்ணப்பப் படிவம்

விவசாயம், விளையாட்டுத் துறை, மனையியல் ஆசிரியர்களுக்கான படிவம் விற்பனையாகிறது. முழு விபரங்களையும் எமது ஸ்தாபனத்தில் பார்வையிடலாம். நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். (சி-6452)

## நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம். எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6418)

## 40 பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தொழிலாளர் கற்கைநெறி (90) பரீட்சையில் 40 பேர் சித்தியடைந்துள்ளனர்.

## இன்று

(பண்டத்தரிப்ப)

சுழிபுரம் கொத்தணியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி இன்று புதன் மாலை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூகவியல் பகுதியினரால் இன்று பி.ப. 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு. எஸ். முருகவேள் இந்திய ஆயுள்வேத வைத்திய சாஸ்திர நூல்கள் என்னும் பொருள்பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் அறிமுக உரை நிகழ்த்துவார்.

# இராசி பலன்

24-06-1992

புதன்கிழமை

(தமிழுக்கு ஆனி 10)

நவமி ந. இ. 12-09 வரை, ரேவதி பி. இ. 4-40 வரை, இராகுகாலம் காலை 11-55 முதல் 1-25 வரை, சுபநேரம் மாலை 4-25 முதல் 5-55 வரை, மரணயோகம்.

மேடம்: தொழில் வெறுப்பு, தைரியக்குறைவு, பணமுடை.

இடபம்: தயாளசிந்தை, தொழில் மேன்மை, குடும்ப சுகம்.

மிதுனம்: வேண்டியதை அடைதல், பிரயாசமிகுதி, பாராட்டு.

கடகம்: தகாத உறவு, கடும் போக்கு, மன உளைச்சல்,

சிங்கம்: அவமரியாதை, வாக்குப்பகை, பயணதுன்பம்.

கன்னி: அற்பர் உதவி, தொழில் சிரமம், மனமாற்றம்.

துலாம்: கற்பனைவாதம், காரியசித்தி, பணவரவு.

விருச்சிகம்: சஞ்சலஉணர்வு, கடித தொல்லை, வெறுப்பு.

தனுசு: துடுக்குத்தனம், கீழ்ப்படிதல், பெரியோர்பகை.

மகரம்: பெற்றோர் உதவி. கடன்வரவு, புதிய முதலீடு.

கும்பம்: அடிமைநிலை, தனிமைப்படல், வேதனை.

மீனம்: குடும்ப மகிழ்ச்சி, புதிய பதவி, தானதர்மம்.

ஜோஸ்யர்:

## சுகாதார கருத்தரங்கு

(உடுவில்)

சுதுமலை சிறி புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் சுகாதாரக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

வயிற்றோட்டம், ஏற்புவலி, சுற்றுடல் சுகாதாரம், விசர் நாய்க்கடி போன்ற பலவித சுகாதார சம்பந்தமான விளக்கங்களும் கருத்துப் பரிமாறல்களும் இக் கருத்தரங்குகளில் இடம்பெற்று வருகின்றன. (109)

---

உ

அளவெட்டி வடக்கு

தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவில்

## வருடப் பெருந் திருவிழா 1992

| | | |
|---|---|---|
| 26-06-92 | வெள்ளிக்கிழமை | கொடியேற்றம் |
| 04-07-92 | சனிக்கிழமை | சப்பறத்திருவிழா |
| 05-07-92 | ஞாயிற்றுக்கிழமை | தேர்த்திருவிழா |
| 06-07-92 | திங்கட்கிழமை | தீர்த்தத்திருவிழா |

பரிபாலன சபையினர்.

[சி-6453]

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை, தலைமையகம்

## தையல் பயிற்சி ஆசிரியைகள்

யாழ்ப்பாணம், கரவெட்டி, நெடுந்தீவு, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான, மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள், தகமையும், அனுபவமும் உள்ளோரிடமிருந்து, 04-07-92 வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் 06-07-92 காலை 10-00 மணிக்கு எமது பணிமனையில் நேர்முகப் பரீட்சைக்கும், செய்முறைப் பரீட்சைக்கும் சமூகம் தரவும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
21-06-92.

ச, சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

(எ-2242)

---

## தரப்படுத்தலைப்போன்று
# வெட்டுப்புள்ளி அதிகரிப்பு கசப்புணர்வை ஏற்படுத்தும்

(யாழ்ப்பாணம்)

1970-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறை எவ்வாறு இந்நாட்டின் இரு சமூகத்தினருக்கிடையில் கசப்புணர்வை ஏற்படுத்தியதோ அதேபோன்று தான் 1990 ம் ஆண்டு க. பொ. த. விசேட பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் வெட்டுப்புள்ளி அதிகரிப்பும் கசப்புணர்வை ஏற்படுத்தும்.

இவ்வாறு யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1990 ம் ஆண்டு க. பொ. த. உயர்தர விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை பல்கலைக் கழகத்துக்கு அனுமதிப்பது தொடர்பாக வெட்டுப் புள்ளி அதிகரித்திருப்பதை ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: விசேட பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுக்கும் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கும் வேளை குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவன் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெறுகிறார். இது தரப்படுத்தலை ஒத்தது.

என்னவாக இருந்தாலும் பரீட்சை பின் போடப்பட்டமைக்கு மாணவர்கள் பொறுப்பானவர்கள் அல்ல. அதனால் அவர்கள் பாதிக்கப்படக் கூடாது.''

இதன் பிரதிகள் உயர் கல்வி

(3ம் பக்கம் பார்க்க)

## அகதி முகாமில் வாந்திபேதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மடு அகதிகள் முகாமில் வாந்திபேதி நோய் பலருக்குத் தொற்றியுள்ளது.

மடு முகாமில் தடுப்புமருந்துகள் பற்றாக்குறையினால் மக்கள் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரியவருகிறது. (29)

---

# பெயர் மாற்றம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையை தற்பொழுது வசிப்பிடமாகக்கொண்ட வெங்கடேசப் பெருமாள் ''கணேசா'' ஆகிய நான் இதுவரைகாலமும் ''கணேசா'' என வழங்கி வந்த பெயரினை எண் சோதிட ஆய்வாளர் திரு. எஸ். எஸ் பாலன் [குளப்பிட்டி] என்பவர் மூலமாக எனது பெயரில் சிறுமாற்றம் செய்து

கிருஸ்ணன் வெங்கடேசப்பெருமாள் கணேசலிங்கம்

என மாற்றியமைத்துள்ளேன் என்பதை ஸ்ரீலங்கா குடியரசுக்கும் நண்பர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள
கி. வெ. கணேசலிங்கம்

பரமநாதன் (இல்லம்)
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(சி-6450)

---

## தமிழீழ காவல்துறை
# பதவி வெற்றிடம்

காவலர்/உப பரிசோதகர்கள் பதவிகள்

கல்வி: 1. காவலர்: க. பொ. த: சாதாரணம்
2. உப பரிசோதகர்: க. பொ. த. உயர்தரம்

உயரம்: 5 அடி 6 அங்குலம்

வயது: 18 முதல் 30 வரை

மேற்படி தகைமையும் நல்ல தேகக்கட்டும், திடகாத்திரமுமுள்ள விண்ணப்பதாரிகள் 25-06-1992 வியாழன் காலை 9-00 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம்வரவும்.

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

23-06-1992 (ஏ 2246)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசாமி கோவில் 1992ம் ஆண்டு மகோற்சவகால தற்காலிக சந்தைகள்

# கேள்விப்பத்திரம் கோரல்

01. நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலும்
02. பண்டார மாளிகை வளவில் தீயணைக்கும்சேவை நிலையத்திற்கு கிழக்குப் பக்கமாகவும்,

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 17-07-92ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவக்கட்டணமாக ரூபா 50ஐயும்/- மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணையாக ரூபா 250/-ஐயும் செலுத்துவதன் பேரில் 16-07-92ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00மணிவரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப்பிரதிகளில்) கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 17-07-92ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00மணிக்கு பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான சகல விபரங்களையும் யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
17-06-1992.

(எ-2243)

# அகதி முகாம் தீப்பிடித்தது உடைமைகள் எரிந்து நாசம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் பனங்காடு அகதிகள் முகாம் தீப்பிடித்து எரிந்து முற்ருக நாசமாகியுள்ளது.

ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிமுகாம்களில் பனங்காடு அகதிமுகாம் நேற்றுமுன்தினம் தீப்பிடித்து எரிந்து சாம்பரானது.

கடந்த இரு வருடங்களாக இம்முகாமில் 52 குடும்பங்களை சேர்ந்த 210 பேர் தங்கியிருந்தனர். இச்சம்பவத்தால் உடுத்த உடுப்பை தவிர ஏனையவற்றை இழந்து இந்த அகதிகள் நிர்க்கதியாகிவிட்டார்கள்.

இத் தீச்சம்பவத்திற்கான காரணம் பற்றி எதுவும் தெரிய வரவில்லை. (சி)

## 50 குடும்பங்களுக்கு வீடுகள்

(மானிப்பாய்)

நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த 50 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினால் நவாலி தெற்கில் தனித் தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (71)

## யாழ். ஆஸ்பத்திரியில் பல் கட்டும் பிரிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது மருத்துவ பற்சிகிச்சை பிரிவில் பற்கள் கட்டும் பிரிவு ஒன்று இயங்க உள்ளது.

பற்களை இழந்தவர்களுக்கு வசதியாக இப்பிரிவு பற்சிகிச்சைபகுதியில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

இதற்காக பற்களை வடிவமைக்கும் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் கொழும்பிலிருந்து யாழ் பொது மருத்துவமனைக்குவந்துள்ளார் இவர் இதற்கானஏற்பாடுகளை செய்துவருகிருர்.

யூலைமாதமளவில் பற்களை கட்டும் பிரிவு இயங்குமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (56)

## ஆங்கில தினவிழா

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மாகவித்தியாலயத்தில் ஆங்கில தினவிழா அதிபர் க. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

கைதடிக் கொத்தணி அதிபர் செ. நா. சத்தியநாதன், ஆங்கில கல்வி ஆலோசகர் என். எஸ். நடராசா ஆகியோர் பங்குபற்றினர், இ. சுப்பிரமணியஐயர் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்திஞர்.

ஆசிரியர் சி. சதாசிவம், இ. சுப்பிரமணியஐயர் ஆகியோர் உரையாற்றிஞர்கள்.

சி. தமிழ்ச்செல்வி வரவேற்புரை நிகழ்த்திஞர். ச. அனுஷா நன்றி கூறிஞர்.

## கண்டனத் தீர்மானம்

(கொழும்புத்துறை)

வற்ருப்பளை அம்மன் கோவில் மீதும், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயத்தின் மீதும் அண்மையில் அடுத்தடுத்து அரச படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து தொல்புரம் மத்திய கிராமஅபிவிருத்திச் சங்கம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது. (154)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞே. க. தமிழ்க் கலவன் பாடசாலையில் தாச்சிப்போட்டி அண்மையில் பாடசாலை முன்றலில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் கா இராசகோபாலு தலைமையில் நடைபெற்ற இப்போட்டியின் பிரதம விருந்திஞராக கொத்தணி அதிபர் சி. பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டார். போட்டியின் பிரதம தீர்ப்பாளராக க. பசுபதி கடமையாற்றிஞர்.

## நோயாளர் அதிகரிப்பு

(கொக்குவில்)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையால் நடாத்தப்படும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் காய்ச்சல், வயிற்ருேட்டம், சொறி, சிரங்கு போன்ற நோயாளர் தொகை அதிகரித்துள்ளது.

இதில் இடம்பெயர்ந்தோர் தொகையே கூடுதலாகவுள்ளதாகவும், மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் டாக்டர் வே. வேதநாதன் தெரிவித்துள்ளார்.

## தரப்படுத்துதலைப்போன்று

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சருக்கும், இராஜாங்க அமைச்சருக்கும், பல்கலைக் கழக ஆணைக்குழுத் தலைவருக்கும், செயலாளர் உயர் கல்வி அமைச்சுக்கும் யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (சு)

## தேசிய சேமிப்புவங்கி: சிறந்த முகாமையாளராக தமிழர் ஒருவரும் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் தேசிய சேமிப்பு வங்கியினால் கடந்த வருடம் சிறந்த முகாமையாளர்களில் ஒருவராக வடமராட்சியைச் சேர்ந்த ஒரு தமிழரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி கிளையின் முகாமையாளரான கதிரவேலு சமலசேகரம் என்பவரே தெரிவு செய்யப்பட்ட தமிழராவார்.

மேற்படி சிறந்த முகாமையாளர்களுடன் வங்கியின் தலைமைக் காரியாலய உயரதிகாரிகளும் உள்ளடக்கிய எட்டுப் பேர் இக் கௌரவத்திற்காகவும், புலமைப்பரிசில் பயிற்சி முகாமிற்காகவும் ஜூன் மாதம் 17ம் திகதி பம்பாய், கராச்சி, டாக்கா ஆகிய இடங்களில் உள்ள சிறந்த வங்கிகளுக்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். (56)

## லெபனானிலிருந்து 30,000 இலங்கையர்களும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

(கொழும்பு)

லெபனானில் தொழில் புரியும் 30 000 இலங்கையர்களும் திருப்பி அனுப்பப்படமாட்டார்களென இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அங்கு பணிபுரிவோருக்கு எந்த பாதிப்பும் இல்லையெனவும் அவர்கள் கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும்சூழ்நிலை இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு தொழிலாளர்களைலெபனானுக்குள் கொண்டு செல்லும் முகவர் நிலையங்களின் செயற்பாட்டுக்கே தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதுவும் தற்காலிக தடை என்றும், இத்தடையால் இலங்கையர் திருப்பி அனுப்பப்படுவர் எனயாரும் அஞ்சத் தேவையில்லை என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## இடம்பெயர்ந்த 75 குடும்பங்களுக்கு சுகாதார வசதி

(யாழ்ப்பாணம்)

கீரிமலை, சேந்தான்குளம், இளவாலை, போயிட்டி ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பண்டத்தரிப்பு செபமாலை மாதா தேவாலயத்தில் தஞ்சமடைந்திருக்கும் 75 குடும்பங்கட்கு செபமாலை சன சமூகநிலையத்தினர் 7 மலசல கூடங்களை அமைத்து சுகாதார வசதியினை செய்து கொடுத்துள்ளனர்.

இவர்கள் தங்குவதற்கும் பல வசதிகளையேற்படுத்திக் கொடுக்குமுகமாக சனசமூக நிலையத்தினராலும் தேவாலயப்பகுதியினராலும் ஓலைக் கொட்டகைகள் அமைத்துக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (56)

## மாணவர்களுக்கு போஷாக்குணவு கிடைக்க வழி செய்யவேண்டும்

(வட்டுக்கோட்டை)

எமது மாணவரின் உணவு முத்திரைகள் திரும்பிப் போகாதவகையில் ஆசிரியர்கள் செயற்படவேண்டும் மாணவர்களது உணவுமுத்திரைகளுக்கு போஷாக்குள்ள தானிய உணவு வகைகள் வழங்கப்படுகின்றனவா என்பதை அதிபர் ஆசிரியர்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும்.''

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.வி. மகேசவேல்தலைமையில் நடைபெற்ற பாடசாலை அதிபர்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய இணைப்பாளர் திரு. அருண் மாஸ்டர் மேற்கண்டவாறு கூறிஞர்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது; பாடசாலைகள் மாணவர்களை எதிர்கால நற்பிரஜைகளாக பூரணமனிதர்களாக உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன'' என்ருர். (139)

## பொதுவேலை நிறுத்தத்திஞல் பாதிப்படைந்த வடபகுதி பஸ்ஊழியருக்குநிவாரணம்

[பண்டத்தரிப்பு]

1980-ம் ஜூலை மாதத்தில் இடம் பெற்ற பொது வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி பாதிப்படைந்த வடபிராந்திய போக்குவரத்து சபையை சேர்ந்த ஊழியர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கு கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வாரம் கொழும்பிலிருந்து திரும்பிய வடபிராந்திய போக்குவரத்து சபையை சேர்ந்த உயர்அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார். (72)

## அரச அதிபருக்கு கடற்றெழிலாளர் மகஜர்

(கொழும்புத்துறை)

ஸ்ரீலங்கா படையினரின் தாக்குதல்களினுல் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றவேண்டும்.

கொழும்புத்துறை கடற்றெழிலாளர் சங்க செயலாளர் திரு வி திருநாவுக்கரசு, யாழ், அரச அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அம் மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கல்முனை, பூவரசம்தீவு, மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஷெல் தாக்குதல், துப்பாக்கிச்சூடு நடத்தியும் படையினர் தினசரி எமது தொழிலாளர்களை சுட்டுக் கொலை செய்தும், காயப்படுத்தியும் கைதுசெய்தும் உள்ளார்கள்.

இப்படியான இராணுவத்தினர்கள் கெடுபிடிகள், அடாவடித்தனத்தாலும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லாது தமது வீடுகளில் முடங்கிக் கிடக்கிருர்கள். இவர்கள் தொழில் இல்லாது இருப்பதால் இவர்களின் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கவேண்டிய நிலையில் உள்ளார்கள்.

எனவே இவர்கள் எடுத்து வரும் கடற்தொழில் நிவாரணத்தை இடைநிறுத்தாது தொடர்ந்து வழங்கவேண்டும். இவர்களை பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுங்கள்.

கடற்றெழில் செய்துவந்த எமது சங்கத்தைச் சேர்ந்த சகல மீனவர்களுக்கும் தொடர்ந்து நிவாரணம் வழங்கி உதவவேண்டும். [154]

## கண்ணதாசன் என்னும் கவிதைத் தமிழ்ச் சுரங்கம்

தென்றல் கிசுகிசுக்கத்; தேனருவி தாலாட்ட;
அன்றில்கள் எல்லாம், அணிவகுத்துப் பண்ணிசைக்க;
நின்றபெரு மரக்கிளைகள், நிலம்விசிறிக் காற்றிசைக்க;
மன்றமென வீற்றிருந்தே, மணிக்கவிதை பாடியவன்!

★ ★

பொட்டணிந்த வண்ணமுகம், புன்னகையின் வசமாகப்
பட்டணிந்த தங்கவுடல், 'பா'வணிந்து மெருகேறத்
தொட்டணிந்த ''சினிமா''வைத், தொட்டிலெனக்
கொண்டவனே!
மெட்டணிந்த பாட்டுகளில் மெதுவாகத் தவழ்கின்ருய்!

ஜெ. கி. ஜெயசீலன்

[காலஞ்சென்ற கவியரசர் கண்ணதாசனின் 65-ஆவது பிறந்தநாள் இன்ருகும்]

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மொளிவாதம்நோய்பற்றிய கருத்தரங்கும், அந்நோயைக் குணப்படுத்தும் யோக சிகிச்சை முறைகள் பற்றிய கருத்தரங்கும் அந்நோயைக் குணப்படுத்தச் செய்யப்படும் யோகாசன செய்முறைப்பயிற்சியும், அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினரால், எதிர் வரும் 28ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3-30மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும்.

## வலைப்பந்தாட்ட போட்டி

(ஆனைப்பந்தி)

ஊர்காவற்றுறை- வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக வலைப்பந்தாட்டப் போட்டிகள் இம் மாதம் 28 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. (75)

## வைத்திய இறுதியாண்டு பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் எம். பி. பி எஸ். இறுதிப் பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்.

கே. லிங்கேஸ்வரன், என். செந்தில்ராஜ் ஆகிய இருவரும் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்துள்ளனர்.

எஸ். உதயகுமாரன், எம். தமிழ்தாசன், செல்வி கே. யசோதை, செல்வி கே. இராசசுலோசஞ, ரி சிதம்பரகுமார், ரி. துளசிராசா, கே. சுந்தரலிங்கம், பி. நடேசராசன், செல்வி ஏ. ஜே. ஸ்ரீபன் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (சு)

# ★ யாழ்ப்பாணம் மீதான தாக்குதல்
# மக்கள் இல்லாத மண்ணையே ராணுவம் கைப்பற்ற முடியும்

(கொழும்பு)

இராணுவம் யாழ்ப்பாணம் முழுவதையும் கைப்பற்ற முயன்றால், இறுதியில் மக்கள் இல்லாத வெறும் மண்ணையே அங்கு அவர்கள் காண்பார்கள்.

இவ்வாறு கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை தனது வாராந்த விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அக்கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது; புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விடுவிப்பதற்காக, படையினர் கடந்த 2, 3 வாரங்களாக முயன்றபோதிலும், விடுதலைப் புலிகள் கடுமையாகப் போரிட்டு யாழ்ப்பாணத்தை விட்டுக்கொடுக்க அவர்கள் தயாரில்லை என்பதையே காட்டுகிறது.

புலிகள் வைக்கும் கண்ணி வெடிகளும், மோட்டார் தாக்குதல்களும் முன்னேறும் படையினருக்குப் பெருமளவு உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றது. (சு)

## தமிழ் மாணவரின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு நடத்துவதற்கு 10 லட்சம் ரூபாய்ட்டில் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது என பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற கருத்தரங்கில் கலாநிதி எஸ் ஸ்ரீசற்குணராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சில மாணவர்கள் 1990-ம் ஆண்டு விசேட பரீட்சையில் அதிக புள்ளிகளை எடுத்திருந்தும், அடுத்துவந்த பரீட்சையில் தோற்றுவிட்டார்கள்.

அதேநேரம் வெட்டுப்புள்ளி அதிகரிக்கவேண்டும் என்று பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த தினேஷ் குணவர்த்தன தமிழ் மாணவர்கள் வணிகத்துறை, கணிதத்துறையில் எடுக்கும் புள்ளிகளின் சராசரியைக் காட்டியதோடு 1990-ம் ஆண்டு ஆகஸ்டில் நடந்த பரீட்சையின் கேள்விகளை ஒத்ததாக 1991-ம் ஆண்டு விசேட பரீட்சையில் அமைந்திருந்தபடியால் தமிழ் மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள் எனக் கூறியுள்ளார்.

தரவரிசையாக பொறியியல் துறைக்கு 600 வெற்றிடங்கள் இருந்தால் அதில் திறமைக்கு 4 வீதத்தில்-240 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களில் 57 பேர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகின்றார்கள். மாவட்ட அடிப்படை எல்லாமாகச் சேர்த்து யாழ் மாவட்டத்துக்கு 80 பேர் பொறியியல்துறைக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உயர் கல்வி அமைச்சர் ஹமீட் அறிமுகப்படுத்தும் புதிய முறைப்படி 1990-ம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சையில் 90,000 மாணவர்கள் பங்கு பற்றினார்கள் என்றும் விசேட பரீட்சையில் 8,685 மாணவர்கள் பங்குபற்றியிருந்தால் கூட்டுத்தொகையின் படத்தில் ஒருபங்கு வீதப்படி திறமை அடிப்படையில் 24 பேரே பொறியியல் துறைக்கு பல்கலைச்சழகத்துக்கு அனுமதி பெறுவார்கள். இதே ரீதியில் தான் மொறட்டுவ பல்கலைச் சழகத் தேர்வுக்கு மாணவர்கள் இடம் பெறுவார்கள்.

யாழ். மாவட்டத்துக்கு வெட்டுப் புள்ளி அதிகரித்ததினால் எடுபடாத மாணவர்களின் வெற்றிடங்கள் ஏனைய பல்சலைக்கழகங்களுக்குபோய்ச் சேரக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

1990ம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சை கொழும்பில் எடுத்த தமிழ் மாணவர்களுக்கு சலுகைகள் இருக்கின்றபோதிலும் 1990ம் ஆண்டு விசேடபரீட்சை எடுத்த மாணவர்கள் அமைச்சர் ஹமீத்தின் திட்டத்தின் கீழேயே வருவார்கள் என்றும் கூறினார். (சு)

## ஜெயலலிதாவை கவிழ்க்க அ. தி. மு. க. காங்கிரஸ் சதி

(சென்னை)

அ. தி. மு. க.விலுள்ள சிலர் காங்கிரஸாருடன் சேர்ந்து தன்னைக் கவிழ்க்கச் சதி செய்கிறார்கள் என தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியலில் இணக்கமான நல்லுறவு என்பதெல்லாம் நிலையானதல்ல. காங்கிரஸாருடன் சேர்ந்து கொண்டு என்னைக் கவிழ்க்க அ.தி.மு.க. வில் ஒரு பிரிவினர் சதி செய்கிறார்கள்.

கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் தான் பாதுகாப்புக் கவசம் அணிந்திருப்பதாகவும் அவர் கூறினார். (சி)

## சீனஜனதிபதி காலமானர்

(பீக்கிங்)

சீனஜனதிபதி லீலின் சியானியாங்பீக்கிங்கில் நேற்றுமுன்தினம் காலமானர்.

சீன அரசியல் ஆலோசனை தேசிய நிறுவனத்தின் தலைவரான இவர் 1986ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## குமண வருகிறது

(கொழும்பு)

குமண கப்பல் அடுத்த மாதம் 8-ம் திகதி பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

இக்கப்பலில் இம்முறை யாழ். அரச அதிபரின் பாவனைக்காக ஒரு ஜீப் வண்டியும், யாழ் செயலகத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஜெனரேட்டர்களும் தபால் பொதிகளும் அனுப்பிவைக்கப்பட இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## பல்கலைக்கழகம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ழக்கிழமை நடத்துவதென நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள், பாதிக்கப்பட்ட மாணவர்கள், ஆசிரியர் சங்கங்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர் மன்றம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் மற்றும் நிறுவனங்களும் பங்குபற்றுவதென முடிவு எடுக்கப்பட்டது.

மற்றைய மாவட்டங்களில் கடைப்பிடிக்கும் வெட்டுப் புள்ளியை விட அதிகளவு வெட்டுப் புள்ளி, 1990ம் ஆண்டு விசேட பரீட்சை எடுத்தவர்களுக்கு அரசாங்கம் கடைப்பிடிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை மகஜர் மூலம் யாழ் அரசஅதிபருக்கு தெரிவிப்பது என்றும் யோசனை முன்வைக்கப்பட்டது. (சு)

## நிவாரண அட்டை

(காங்கேசன்துறை)

வலி-வடக்கில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இராணுவ நடவடிக்கையால் நிவாரண அட்டைகளைத் தவறவிட்டவர்களுக்கு, விசேட அனுமதிப் பத்திரம் மூலம் நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

தமது நிவாரண அட்டைகளைத் தவறவிட்ட சுமார் 50 பேர் இது குறித்து வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே சந்திரராஜாவிடம் முறையிட்டதையடுத்து உதவி அரச அதிபர், அவர்களுக்கு விசேட அனுமதிப் பத்திரங்களை வழங்கி நிவாரணப் பொருட்களைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். (86)

## வீரச் சாவு

(யாழ்ப்பாணம்)

கட்டைக் காட்டில் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிப் போராளியான சுரேஷ் (காசிப்பிள்ளை சிவராசா அம்பாறை) வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இதேவேளையில் பொன்னாலைப் பகுதியில் நேற்று ஏற்பட்ட வெடிவிபத்து ஒன்றில் 2-ம் லெப். சுங்காமுனி (யேசுதாசன் பேர்னாட்சா மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்) வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

வீரச்சாவை தழுவிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

## சென்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் குறிப்பிட்ட விமானத்தில் கோளாறு ஏற்பட்டு கோளாறு சரிசெய்யப்பட்டு விமானம் ஓடுபாதைக்கு சென்ற சமயம் அனாமதேய தொலைபேசி அறிவித்தல் வந்ததையடுத்து, விமானத்திலிருந்து பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு விமானம் ஓர் ஓரத்திற்கு கொண்டு போகப்பட்டு தீவிர பரிசோதனையின் பின்னர் நண்பகல் 12-30 மணியளவில் விமானம் புதுடில்லிக்கு சென்றது.

சென்னையிலிருந்து மதுரை முதலிய இடங்களுக்கு செல்ல வேண்டியவிமான சேவைகளும் நேற்று ரத்துச் செய்யப்பட்டன.

இதேவேளையில் தமிழக சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி புறப்படவிருந்த குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் பயணம் செய்யவிருந்த விமானத்தில் இயந்திரக்கோளாறு ஏற்பட்டதால் புதுடில்லியிலிருந்து வரவழைக்கப்பட்ட விசேட விமானத்தில் அவர் புதுடில்லிக்குச் சென்றுள்ளார். (க)

## 'இந்து' பத்திரிகையுடன் சிறிமா தொடர்பு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்குக் கே ஜி. பி நிதியுதவி அளித்ததாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டதையடுத்து எதிர்க் கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்து பத்திரிகை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். மேலும் இது குறித்து மாஸ்கோவுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## கிராம மக்களின் தேவைகளை ச. ச. நிலையங்கள் நிறைவேற்றவேண்டும்

[உடுவில்]

"கிராம மக்களுக்கு பல விதமான தேவைகள் இன்றையகாலகட்டத்தில் அவசியமாகின்றன அவைகளைப் தீர்த்து வைப்பதில் சனசமூக நிலையங்களின் பங்கு முக்கியமானது. மலசல கூடவசதிகள், திருமணப்பிரிவுகள் மரம் நாட்டுதல். பாலர் பாடசாலைகள் அமைத்தல், பிறப்பு சான்றிதழ்கள் பெற வசதிகள் செய்தல் போன்ற பல கருமங்களை அவை ஆற்ற முன்வரவேண்டும்"

வலிகாமம் தெற்குபிரதேச சபையின் சனசமூக நிலையங்களின் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய உடுவில் உபஅலுவலக பெருப்பதிகாரி திரு. இ. கணேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

திரு. ச. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றஇக் கூட்டத்தில் திரு. கணேஸ்வரன் மேலும் கூறியதாவது:

கிராமங்களில் உள்ள பல குடும்பங்கள் மலசலகூட வசதிகளின்றி வாழ்கின்றனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்து கிராமத்தின் சுகாதார வசதிகள் பேணப்படவேண்டும். பயனுள்ளமரங்களை நாட்டச் செய்வதுடன் விறகுக்காக மரங்களை தறித்து இயற்கை வளங்களை குறைக்கக்கூடாது என அவர்களுக்கு விளங்க வைக்கும் பணிகளில் ஈடுபட வேண்டும்.

சமூக சேவை உத்தியோகத்தர் திரு இரகுலேந்திரன் உரையாற்றுகையில், உரிய காலங்களில் முறைப்படி விவாகப்பதிவுகள் செய்யவும், பிறப்பு சான்றிதழ்கள் பெறவும்வழிகாட்ட வேண்டும் எனக் கூறினார். (109)

## வடக்கில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இரண்டு இடங்களில் இராணுவ வேலிகளை அமைத்து, தமிழீழத்தை மூன்று இராணுவ வலயங்களாகப் பிரித்துப் படிப்படியாக ஒவ்வொரு வலயத்திற்குள்ளும் பலத்தைப் பிரயோகித்து புலிகளை அழித்துத் தமிழ்த் தேசியத்தின் முதுகெலும்பை உடைக்கச் சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## யாழ். குடா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தரோடை செல்லச்சி அம்மையார் வீதியிலுள்ள வீட்டு வளவுகளில் இருகுண்டுகள் வீழ்ந்து வெடித்ததில் மூன்றுபேர் படுகாயமுற்றனர்.

கால்நடைகளும் இறந்துள்ளன. இரு வீடுகள் சேதமாகின. மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

குண்டு வீச்சுத்தாக்குதலில் படுகாயமுற்ற அதே இடத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கருணாமூர்த்தி [40 வயது] என்பவர் யாழ். மருத்துவசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். எஸ். தம்பிஐயா [52 வயது] என்பவரும் படுகாயமடைந்தார்.

நீண்ட நேரமாக இப்பகுதிகளில் இரு பொம்மர்கள் வட்டமிட்டதால் பதட்டமடைந்த மக்கள் பாதுகாப்புத்தேடி ஓடினர்.

தென்மராட்சி பகுதியில் நேற்றுமாலை 5-40 மணியளவில் திடீரென வட்டமிட்ட இரு பொம்மர் விமானங்கள் சாவகச்சேரி புத்தூர் சந்தி மீசாலையில் இரு இராட்சத குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன.

இக்குண்டு வீச்சினால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லையாயினும் மீசாலை, புத்தூர் சந்தி வீதியிலுள்ள நெசவு ஆலை ஒன்றும் தட்டங்குளம் பிள்ளையார் கோயில் மற்றும் இப்பகுதியிலுள்ள எஸ். சுப்பிரமணியம், திருமதி அன்னப்பிள்ளை ஆகியோருடைய வீடுகளும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை நேற்றுக்காலை வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியிலும் பொம்மர் குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் கிடைக்கவில்லை.

பொம்மர் விமானங்களின் திடீர் தாக்குதல்களினால் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பதற்றம் ஏற்பட்டது. [155 - 56 - 86]

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் 2-30 மணியளவிலும் வடமராட்சி ஊடியிருப்புப் பகுதி, கரையோரப்பகுதிகளை நோட்டமிட்டதை காணமுடித்தது.

இதனால் வடமராட்சி மக்கள் பெரும் பதட்டமடைந்தனர். அத்துடன் ஹெலிக்காப்டரும் வட்டமிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [56]

## பிரபாவை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதன் மூலம் இலங்கை மீண்டும் ஒருமுறை இந்தியாவுடனான உறவில் ஒரு நெருக்கடியை எதிர்நோக்கவேண்டி இருக்குமெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## 61 நாளில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மீது புலி வீரர்கள் தொடர்ச்சியாக பல அதிரடித்தாக்குதல்களை நடத்தியிருப்பதுடன் சிங்களப் படையினரின் நான்கு பெரிய இராணுவ நடவடிக்கைகளையும் எதிர்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## அன்னையர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ணியினர் நடாத்தினர்.

மிக நீண்ட ஆர்ப்பாட்ட பேரணிக்கு எதிர்க்கட்சிதலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை தாங்கினர். ஊர்வலத்தின் பின் கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் கண்டன கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய கோட்டே நகராதிபதி மாசியதோ தேரர் குறிப்பிடுகையில்; 'அநேக பிள்ளைகள் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதை கண்டு வேதனை அடைகிறேன் என்றார்.

இப்பேரணியிலும் கூட்டத்திலும் பெருமளவில் அன்னையர்கள் கலந்துகொண்டனர். (சு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Nnmber B/10336/8